**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.251/2020</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23 ஆம் நாள் வியாழக் கிழமை பிரதிவாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோஸ்பின் மேரி | கணவர் பெயர் | : | மார்டின் செலின் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 23.07.2026

**D.W. : 1**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் முதல் பிரதிவாதி எனது கணவர். என் கணவரின் ஆலோசனையை கேட்ட பிறகு தான் நான் இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தற்சமயம் மனை எண்.20 பேன்சி நகர், 2வது தெரு, பொன்மலைப்பட்டி, திருச்சி என்ற விலாசத்தில் குழந்தைகளுடன் வசிக்கிறேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து, 09.03.1983 அன்று வாதியின் தாயார் ஜெபமாலை மேரி

என்பவரால் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் என் கணவர் இளவராக இருந்தார் என்றால் சரிதான். வாதியின் தாயார் தாவாச் சொத்தை வாதியின் பெயருக்கு 23.03.2018 அன்று ஒரு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அதை கேள்வி பட்டவரை தெரியும். அந்த விவரத்தை எங்கள் உறவினர் எங்களிடம் சொன்னார். அந்த ஆவணம் எழுதி வைத்த உடன் வாதியும், அவரது தாயாரும் என்னிடம் நேரில் விவரம் சொன்னார் என்றும், நானும் அவரிடம் என் கணவர் இங்கு வரும் வரை அதே இடத்தில் வசிக்க அனுமதிக்க வேண்டும் என கோரினேன் என்றால் சரியல்ல. வாதியுடன் பிறந்தவர்களில் என் கணவர் தவிர மற்றொரு தங்கையும் உண்டு என்றால் சரிதான். வாதியின் அண்ணன் ஒருவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் 06.07.2011 அன்று திருமணம் நடந்தது. திருமணம் ஆன பிறகு 2 வருடங்கள் நான் வாதி மற்றும் அவரது தாயாருடன் தரை தளத்தில் ஒன்றாக சமைத்து சாப்பிட்டு வந்தோம் என்றால் சரிதான். வாதியின் தாயாரை நானும், என் கணவரும் சேர்ந்து பராமரித்து வந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரிதான். என் மாமனார் பொன்மலை இரயில்வே பணிமனையில் வேலை பார்த்து எங்கள் திருமணத்திற்கு முன்பே பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். திருமண சமயத்தில் என் கணவர் விடுமுறையில் ஊருக்கு வந்திருந்தார். என் கணவர் 2001 முதல் கேட்டரிங் பணியில் உள்ளார். என் கணவர் 2001 முதல் கேட்டரிங் பணியில் இருந்து வருவதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் இல்லை. என் கணவர் 2000 ஆம் ஆண்டில் கேட்டரிங் முடித்தார். முதலில் என் கணவர் கேட்டரிங் முடித்து விட்டு, இங்குள்ள

ஹோட்டல்களில் வேலை செய்தார் என்றால் சரிதான். என் கணவர் வெளிநாட்டில் 8 மாதம் வேலை பார்ப்பார் என்றும், 4 மாதம் இங்கு ஓய்வில் இருப்பார் என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் வேலைக்குச் சேர்ந்தது எனக்கு நேரடியாக தெரியாது. என் கணவர் வேலைக்கு சேர்ந்த போது எவ்வளவு சம்பளம் என்று எனக்கு நேரடியாக தெரியாது. அவரை கேட்டால் தான் தெரியும். என் மாமியார் இந்த வழக்கில் வாதிக்கு ஆதரவாக செட்டில்மெண்ட் எழுதி வைத்ததை பொறுத்து சாட்சியம் அளித்த விவரம் தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி–5 ல் சொல்லியுள்ள விவரம் பொய் என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் சொல்லாத விவரங்களை முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அவை பொய் என்றும், அதனால் தான் அவற்றை எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் எனக்கோ என் கணவருக்கோ எந்த பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் நாங்கள் இருந்த பகுதியை காலி செய்துவிட்டு, அதே ஏரியாவில் புது வீடு கட்டி குடிபோய்விட்டோம் என்றால் சரியல்ல. எங்கள் பொருட்கள் அங்கு தான் உள்ளது. புதுவீட்டில் நான் குழந்தையுடன் வசிக்கிறேன் என்றால் சரிதான். நான் சும்மாவே அந்த வீட்டை பூட்டி வைத்துள்ளேன் என்றும், அதனால் அந்த வீடு பாழடைந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில், முதல் தளத்தில் நாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக வசிக்கவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் புதுவீடு கட்டி வசிக்கும் விவரத்தை முதல் விசாரணையில் சொல்லவில்லை. என் கணவர் வாதி மற்றும் அவரது தாயாருடன் அடிக்கடி பிரச்சனை செய்தார் என்றும், நாங்கள் குடியிருக்கும் பகுதிக்கு மாதம் ரூ.4000/– வாடகையும், ரூ.2000/–

மின்கட்டணமும் வாதியின் தாயார் எங்களிடம் கேட்டார் என்றால் சரியல்ல. அது குறித்து அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. சாட்சி மீண்டும் கூறுகிறார் – நோட்டீஸ் வந்தது. 20.01.2017 அன்று நாங்கள் அந்த அறிவிப்பை வாங்கவில்லை என்றால், தெரியாது. வாதிக்கு அவரது தாயார் தான செட்டில்மெண்ட் எழுதிய விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. அப்போது நான் வாதியிடம் சிறிது காலம் மேற்படி வீட்டின் முதல் தளத்தில் அனுமதியின் பேரில் வசிப்பதாக கேட்டோம் என்றும், அதற்கு வாதியும் ஒப்புக் கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவர் 2017 பிப்ரவரியில் வெளிநாடு சென்றவர், இதுவரை திருச்சிக்கு வரவில்லை என்றால் சரிதான். சென்னைக்கு வந்தார். என் கணவர் சென்னைக்கு வரவில்லை என்றும், ஆனால் கப்பலில் இருந்து நிலத்திற்கு பணிமாறுதல் ஆகிவிட்டார் என்றும், அதனால் அவரால் இந்தியாவிற்கு வரமுடியவில்லை என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் இருந்த வீடு 1997 லேயே கட்டப்பட்டது என்றும், நாங்கள் வசித்த முதல் தளம் சரியாக பராமரிக்காததால் பழுதடைந்தது என்றும் சொன்னால் சரியல்ல. அவை பராமரிக்க வேண்டி எங்களை 2019 காலகட்டத்தில் வாதி காலி செய்யக் கோரினார் என்றால் சரியல்ல. நாங்கள் வாதி கோரிய படி காலி செய்யாமல் அவரை சில அசிங்கமான வார்த்தைகளால் திட்டினோம் என்றால் சரியல்ல. அதனால் வாதி திருவெறும்பூர் காவல் நிலையத்தில் 24.07.2020 அன்று புகார் கொடுத்தார் என்றால், நான் தான் முதலில் புகார் கொடுத்தேன். வாதி புகார் கொடுத்தார் என்றும், அது உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் தீர்த்து கொள்ள சொல்லிவிட்டார்கள் என்றால் சரியல்ல. அதை சாதகமாக பயன்படுத்தி திருவெறும்பூர் அனைத்து மகளிர் காவல்

நிலையத்தில் 24.09.2020 அன்று வாதியும் அவரது பெற்றோரும் கொடுமைப்படுத்துவதாக கூறி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் உரிமையியல் தன்மை கொண்டதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடி கொள்ள சொல்லிவிட்டார்கள் என்றால் சரிதான். வாதி மற்றும் அவரது பெற்றோருக்கு போலீசார் அறிவுரை சொன்னார்கள். நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்தி –8 முதல் 11 வரை உள்ள சங்கதிகளை வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2011 ல் தான் எனக்கு திருமணம் நடந்தது என்றும், என் கணவர் ரூ.15 இலட்சம் வீடு கட்ட 2006–ல் கொடுத்ததாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் பத்தி–13,14 ல் உள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி–16 முதல் 18 வரை உள்ள விவரங்கள் பொய்யானவை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.